(1) $a=kr^{\frac{1}{2}}v^{\frac{1}{2}}$ (2) $a=kr^{\frac{1}{3}}v^{\frac{1}{2}}$ (3) $a=kr^{-1}v^{-3}$ (4) $a=kr^{-1}v^{-2}$ (5) $a=kr^{-1}v^{2}$

2012-0-3

28. ஒரு மெல்லிய சீரான L வடிவமுள்ள உலோகத் தகடு உருவில் காணப்படுகின்றது. தகட்டின் ஈர்ப்பு மையம் பெரும்பாலும் இருக்கத்தக்க புள்ளி




(1) $A$
(2) $B$
(3) $C$
(4) $D$
(5) $E$




2012 - 4

29. ஒரு குற்றி ஓய்விலிருந்து தொடங்கி ஓர் உராய்வற்ற சாய்வு வழியே புள்ளி $A$ யிலிருந்து புள்ளி $B$ யிற்குக் கீழ்நோக்கி வழுக்குகின்றது குற்றி புள்ளி $B$ யைக் கடந்த பின்னர் ஒரு சீரான உராய்வு விசை குற்றியின் இயக்கத்திற்கு எதிராகச் செயற்பட்டு அது $B$ யிலிருந்து 2.5 m தூரத்தில் குற்றியை ஓய்விற்குக் கொண்டு வருகின்றது. குற்றிக்கும் கிடைப் பரப்பிற்குமிடையே உள்ள இயக்கப்பாட்டு உராய்வுக் குணகம்

(1) 0.2 (2) 0.4 (3) 0.5 (4) 0.6 (5) 0.8

2012-0-5

30. நீளம் $L$ ஐயும் திணிவு $M$ ஐயும் உடைய ஒரு சீரான செவ்வக மரக் கீற்று ஒரு மேசை மீது $x$ திசை வழியே மேசையின் ஒரு விளிம்புக்குச் சமாந்தரமாக இருக்குமாறும் மரக் கீற்றின் ஒரு பகுதி மேசைக்கு அப்பால் நீட்டியிருக்குமாறும் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வைக்கப்பட்டுள்ளது. மரக் கீற்றின் புவியீர்ப்பு மையம் $G$ யிலிருந்து மேசையின் விளிம்புக்கு உள்ள தூரம் $x_0$ ஆகும். இப்போது திணிவு $m$ ஐ உடைய ஒரு சிறிய குற்றி கீற்றின் இடது அந்தத்தில் வைக்கப்பட்டு, கீற்றின் வழியே $x$ திசையில் அதற்கு $v$ என்னும் ஒரு தொடக்கக் கதி தரப்படுகின்றது. கீற்றுக்கும் குற்றிக்குமிடையே உள்ள இயக்கப்பாட்டு உராய்வுக் குணகம் $\mu$ எனின், கீற்று புரள்வதற்குக் குற்றிக்குக் கொடுக்கத்தக்க குறைந்தபட்சக் கதி




(1) $\sqrt{2\mu g\left(x_0 + \frac{L}{2} + \frac{Mx_0}{m}\right)}$ (2) $\sqrt{\mu g\left(\frac{L}{4} + \frac{Mx_0}{m}\right)}$ (3) $\sqrt{2\mu g\left(x_0 + \frac{L}{2} + \frac{mx_0}{M}\right)}$

(4) $\sqrt{\frac{\mu g M x_0 L}{\left(\frac{L}{2} + x_0\right)}}$ (5) $\sqrt{2\mu g\left(\frac{x_0}{2} + \frac{ML}{m}\right)}$

2015

31. ஓர் உராய்வின்றிய மேசை மீது ஒரு பென்சில் உருவில் காணப்படுகின்றவாறு அதன் கூரில் நிலைக்குத்தாகத் தாங்கப்படுகின்றது. அது $+x$-திசையை நோக்கிச் சுயாதீனமாக விழ விடப்படும்போது பென்சிலின் புவியீர்ப்பு மையத்தின் பாதையை மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிப்பது







(1) (2) (3) (4) (5)

2015

32? உருவில் காணப்படுகின்றவாறு ஒரு பொருள் கிடையுடன் கோணம் $\theta$ வை ஆக்குகின்ற ஒரு திசையில் வேகம் $\upsilon$ உடன் ஈர்ப்பின் கீழ் எறியப்படுகின்றது. நேரம் $(t)$ உடன் பொருளின் வேகத்தின் கிடை $(\upsilon_H)$ கூறினதும் நிலைக்குத்து $(\upsilon_V)$ கூறினதும் மாறலைப் பின்வரும் வரைபுகளில் எது சரியாகக் காட்டுகின்றது ?







2013

33. ஓர் $x-y$ ஆள்கூற்றுத் தொகுதியின் உற்பத்தி $O$ இல் உள்ள ஒரு துணிக்கை மீது $20\ N$, $40\sqrt{2}\ N$, $30\sqrt{2}\ N$ என்னும் மூன்று ஒருதள விசைகள் உருவிற் காணப்படுகின்றவாறு தாக்கினால், துணிக்கையை நிலையாக வைத்திருக்கத் தேவையான விசையை வகைகுறிக்கும் காவி

(1) $OA$ (2) $OB$
(3) $OC$ (4) $OD$
(5) $OE$




2014 —

34. ஒரு கிடைப் பரப்பில் மாறா வேகம் $1\ m\ s^{-1}$ உடன் இயங்கும் திணிவு 500 kg ஐ உடைய ஒரு பாரமான உருளி உருவில் காணப்படுகின்றவாறு ஓர் ஒப்பமான நிலைக்குத்துச் சுவரில் மோதிய பின்னர் 0.5 s இல் நிறுத்தப்படுகின்றது. உருளியினால் சுவர் மீது உஞற்றப்படும் கிடை விசை



(1) 5 000 N (2) 3 000 N (3) 2 000 N
(4) 1 000 N (5) 500 N

2014

35. கிடையாக ஒரு மாறா ஆர்முடுகல் $a$ உடன் இயங்குகின்ற ஒரு வண்டியின் கிடைத் தட்டு மீது வைக்கப்பட்டுள்ள திணிவு $m$ ஐ உடைய ஒரு குற்றி வண்டி தொடர்பாக ஓய்வில் உள்ளது. தட்டுக்கும் திணிவுக்குமிடையே உள்ள நிலையியல் உராய்வுக் குணகம் $\mu$ ஆகும். திணிவு மீது தாக்கும் உராய்வு விசையைத் தருவது

(1) $ma$ (2) $\mu ma$ (3) $\mu m(g+a)$
(4) $\mu m(g-a)$ (5) $mg$

2013

36. இரு சர்வசமக் கயிறுகளினால் கிடையாகத் தொங்கவிடப்பட்டுள்ள ஒரு சீரான மரக் கைம்மரத்தின் மீது நிற்கும் 60 kg திணிவுள்ள மனிதன் ஒருவன் ஒரு சுவரில் தீந்தையைப் பூசுகின்றான். கைம்மரத்தின் திணிவு 20 kg ஆகும். மனிதன் பாதுகாப்பாக $A$ யிற்கும் $B$ யிற்குமிடையே செல்லத்தக்கதாக ஒவ்வொரு கயிறும் தாங்க வேண்டிய குறைந்தபட்ச இழுவை யாது ?




(1) 100 N (2) 400 N (3) 600 N
(4) 700 N (5) 800 N

2013

37. ஓர் ஒப்பமான கப்பிக்கு மேலாகச் செல்கின்ற இலேசான கயிறு ஒன்று உருவில் காணப்படுகின்றவாறு நிலத்தின் மீது ஓய்வில் இருக்கும் திணிவு 25 kg ஐ உடைய ஒரு குற்றியுடன் இணைக்கப்பட்டுள்ளது. திணிவு 20 kg ஐ உடைய ஒரு சிறுவன் கயிற்றில் ஏறுகின்றான். குற்றியை உயர்த்தாமல் சிறுவன் ஏறத்தக்க உயர்ந்தபட்ச ஆர்முடுகல் யாது ?

(1) $1.13\ m\ s^{-2}$ (2) $2.5\ m\ s^{-2}$
(3) $4.5\ m\ s^{-2}$ (4) $12.5\ m\ s^{-2}$
(5) $25.0\ m\ s^{-2}$




2011-O.

38. சர்க்கப்பட்டுள்ள இரு சர்வசம விற்களின் ஒவ்வொரு நுனியும் ஓர் அடைத்த குழாயின் இரு முனைகளிலும் நிலைப்படுத்தப்பட்டிருக்கும் அதே வேளை விற்களின் மற்றைய நுனிகள் உருவில் காணப்படுகின்றவாறு ஒரு திணிவு $m$ உடன் இணைக்கப்பட்டுள்ளன. தொகுதியின் பின்வரும் எந்த இயக்கத்தின் இயக்கங்களின் மூலம் திணிவு $m$ இற்குக் குழாயின் மையத்திலிருந்து $P$ யை நோக்கிய இடப்பெயர்ச்சி வழங்கப்படும் ?




(A) குழாயைக் கிடையாக வைத்துக்கொண்டு $PQ$ வின் திசையில் குழாயின் சீரான ஆர்முடுகல்
(B) குழாயை ஒரு கிடைத் தளத்தில் வைத்துக்கொண்டு $Q$ வினூடாகச் செல்லும் ஒரு நிலைக்குத்து அச்சுப் பற்றிக் குழாயின் சுழற்சி
(C) $P$ யிற்குக் கீழே $Q$ வை வைத்துக்கொண்டு சர்ப்பின் கீழே குழாயின் நிலைக்குத்து இயக்கம்

(1) (A) மாத்திரம்
(2) (A), (B) ஆகியன மாத்திரம்
(3) (B), (C) ஆகியன மாத்திரம்
(4) (A), (C) ஆகியன மாத்திரம்
(5) (A), (B), (C) ஆகிய எல்லாம்

2013

39. ஒரு சிறிய பொருள் தொடக்கத்தில் புள்ளி $O$ இல் ஓய்வில் உள்ளது. அது ஓர் உள் வெடிப்புக் காரணமாக மூன்று பகுதிகளாக்கப்பட்டு வேறாகிச் செல்கின்றது. வெடிப்பின் பின்னர் ஒரு குறித்த கணத்தில் மூன்று இயங்கும் பகுதிகளும் உருவிற் காணப்படுகின்றவாறு $A, B, C$ என்னும் புள்ளிகளில் உள்ளன. புள்ளி $A$ யில் உள்ள பகுதியின் திணிவு 6 கிராம் எனின், வெடிப்புக்கு முன்னர் பொருளின் திணிவு கிராமில் யாது ?




(1) 6
(2) 9
(3) 12
(4) 15
(5) 18

2014

40. திணிவு $m$ ஐ உடைய ஒரு குற்றி ஒரு கிடைத் தளத்தின் மீது வைக்கப் பட்டுள்ள திணிவு $M$ ஐ உடைய ஓர் ஆப்பு மீது வைக்கப்பட்டுள்ளது. தொகுதியின் சுயாதீனப் பொருள் வரிப்படமானது உருவில் காணப்படுகின்றது. வரிப்படத்தில் குறிக்கப்பட்ட விசைகளில் எவை தாக்க - மறுதாக்கச் சோடிகளாகக் கருதப்படலாம் ?




(1) $E$ யும் $C$ யும்; $F$ உம் $G$ யும்
(2) $E$ யும் $D$ யும்; $B$ யும் $A$ யும்
(3) $E$ யும் $D$ யும்; $B$ யும் $H$ உம்
(4) $E$ யும் $C$ யும்; $B$ யும் $A$ யும்
(5) $E$ யும் $C$ யும்; $B$ யும் $H$ உம்

2011

41. நேர் $(+)x$ திசை வழியே கதி $v$ உடன் செல்கின்ற திணிவு $m_1$ ஐ உடைய ஒரு துணிக்கை ஓய்வில் இருக்கும் திணிவு $m_2$ ஐ உடைய வேறொரு துணிக்கையுடன் மீள்தன்மைமுறையாக மோதுகின்றது. மோதுகைக்குப் பின்னர் துணிக்கைகளின் இயக்கம் பற்றிச் செய்த பின்வரும் கூற்றுகளில் எது பிழையானது ?

(1) $m_1 < m_2$ எனின், $m_1, m_2$ ஆகியன முறையே $-x, +x$ திசைகளில் செல்லும்.
(2) $m_1 > m_2$ எனின், $m_1, m_2$ ஆகிய இரண்டும் $+x$ திசையில் செல்லும்.
(3) $m_1, m_2$ ஆகிய இரண்டும் ஒரு தனித் திணிவாக $v$ யிலும் குறைந்த கதியில் $+x$ திசையில் செல்லும்.
(4) $m_2$ ஆனது முடிவின்றிப் பெரிதாக இருந்தாலொழிய $m_1$ இன் கதி $v$ யிலும் குறைவாக இருக்கும்.
(5) $m_1 = m_2$ எனின் $m_2$ இன் கதி $v$ ஆக இருக்கும்.

2011

42. ஒரு கிடை நிலத்தில் ஒரு பீரங்கி தானப்படுத்தப்பட்டிருக்கும் அதே வேளை பீரங்கி இருக்கும் இடத்திலிருந்து 2000 m தூரத்தில் ~~தூரத்தில்~~ இருக்கும் இலக்கில் படுமாறு அதிலிருந்து ஒரு வெடிகுண்டு சுடப்படுகின்றது. வெடிகுண்டின் பாதையில் ஒரு குறித்த புள்ளியில் தற்செயலாக வெடிகுண்டு $A, B$ என்னும் இரு பகுதிகளாக வெடிக்கின்றது. $A$ யின் திணிவு $B$ யின் திணிவின் இரு மடங்காக இருக்கும் அதே வேளை இரு பகுதிகளும் ஒரே நிலைக்குத்துத் தளத்தில் சென்ற பின்னர் ஒரே கணத்தில் நிலத்தில் படுகின்றன. பீரங்கியிலிருந்து இலக்கின் திசையில் 1800 m தூரத்தில் $A$ படுமெனின், பீரங்கியிலிருந்து $B$ நிலத்தில் படும் தூரம்

(1) 1600 m
(2) 2200 m
(3) 2400 m
(4) 2600 m
(5) 2800 m

2010

43.




உரு (1) இல் காணப்படுகின்றவாறு $A, B$ என்னும் இரு சர்வசமக் குற்றிகள் ஒன்றன்மீதொன்று வைக்கப்பட்டுள்ளன அவை ஓர் இழையினால் ஒருமிக்கத் தொடுக்கப்பட்டுள்ள விதம் உரு (2) இல் காணப்படுகின்றது. இரு சந்தர்ப்பங்களிலும் அவை ஒரே பரப்பு மீது வைக்கப்பட்டிருக்கும் அதே வேளை ஒரே வேகம் $\upsilon$ உடன் இயங்குகின்றன. (1) இலும் (2) இலும் பரப்பினால் குற்றிகளின் மீது உஞற்றப்படும் மொத்த உராய்வு விசைகள் முறையே $F_1, F_2$ எனின்,

(1) $F_1 > F_2$ (2) $F_1 < F_2$ (3) $F_1 \geq F_2$ (4) $F_1 \leq F_2$ (5) $F_1 = F_2$

2012-01ℓ

44. உருவில் காணப்படுகின்றவாறு திணிவு $2M$ ஐ உடைய ஒரு பொருள் $A$ ஓர் ஒப்பமான கிடைப் பரப்பு மீது வைக்கப்பட்டிருக்கும் அதே வேளை திணிவு $M$ ஐ உடைய ஒரு சிறிய குற்றி $B$ அப்பொருளின் உச்சியில் வைக்கப்பட்டுள்ளது. ஓய்விலிருந்து தொடங்கிக் குற்றி $B$ ஆனது $A$ யின் ஒப்பமான பரப்பு வழியே கீழ்நோக்கி வழுக்குகின்றது. குற்றி $B$ ஆனது $A$ யிலிருந்து வெளியேறுங் கணத்தில் $A$ யின் கதி $\upsilon$ யைத் தருவது




(1) $\upsilon = \sqrt{2gh}$ (2) $\upsilon = \sqrt{gh}$ (3) $\upsilon = \sqrt{\frac{gh}{2}}$

(4) $\upsilon = \sqrt{\frac{gh}{3}}$ (5) $\upsilon = \sqrt{\frac{gh}{5}}$

2013-50

45. அலகு நீளத்திற்குச் சர்வசமனான திணிவுள்ள $l_1, l_2, l_3, l_4$ என்னும் நீளங்களை உடைய நான்கு மெல்லிய சீரான கோல்களாலான ஓர் ஒருதளக் கட்டமைப்பு உருவில் காணப்படுகின்றவாறு ஒரு கிடைப் பரப்புடன் புள்ளி $O$ இல் நிலைக்குத்தாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. $O$ இல் கோல்கள் காரணமாக உள்ள விளையுள் முறுக்குதிறன் பூச்சியமாக இருப்பதற்கு




(1) $l_1 + l_2 = l_3 + l_4$ (2) $2l_1 + 1.5l_2 = 2l_3 + 2.5l_4$

(3) $4l_1 + 3l_2 = 4l_3 + 5l_4$ (4) $l_1 + 1.5l_2 = 5l_3 + l_4$

(5) $2l_1 + 5l_2 = 4l_3 + 5l_4$

2013-0-34

46. ஒரு மாறா வேகம் $u$ யில் இயங்குகின்ற ஒரு துணிக்கை $t = 0$ இல் ஒரு குறித்த புள்ளியைக் கடந்து செல்கின்றது. அதே புள்ளியிலிருந்து $t = 0$ இல் ஓய்விலிருந்து தொடங்குகின்ற வேறொரு துணிக்கை முதல் துணிக்கையை நோக்கி மாறா ஆர்முடுகல் $a$ உடன் இயங்குமெனின், இரண்டாந் துணிக்கை முதல் துணிக்கையை அடைவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

(1) $\frac{u}{a}$ (2) $\frac{a^2}{2u^2}$ (3) $\frac{2u}{a}$ (4) $\frac{2u^2}{a^2}$ (5) $\frac{u^2}{a^2}$

2013-0-11

47. பின்வரும் அளவீடுகளை கருதுக.

(A) ஒரு நுண்மானித் திருகுக் கணிச்சியைக் கொண்டு 1 mm தடிப்புள்ள ஓர் உலோகத் தகட்டின் தடிப்பை அளத்தல்

(B) மீற்றர் கோலைக் கொண்டு 90 cm நீளத்தை அளத்தல்

(C) வேணியர் இடுக்கியைக் கொண்டு ஓர் உலோகக் கோலின் 0.5 mm விட்டத்தை அளத்தல்

பின்வருவனவற்றுள் எது மேற்குறித்த அளவீடுகளின் திருத்தத்தின் ஏறுவரிசையைத் தருகின்றது?

(1) A, B, C (2) C, A, B (3) B, A, C (4) A, C, B (5) B, C, A

2013-0-3

63. உருவில் ஒரு துணிக்கையின் இயக்கத்திற்கான இடப்பெயர்ச்சி ($s$) எதிர் நேர ($t$) வளையி காணப்படுகின்றது. இதன் இயக்கம் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.




(A) காலம் $t_0 - t_1$ இன் போது துணிக்கை ஒரு மாறா ஆர்முடுகலில் இயங்கும் அதே வேளை காலம் $t_2 - t_3$ இன்போது அது ஒரு மாறா வேகத்துடன் இயங்குகின்றது.

(B) துணிக்கை நேரம் $t_4$ இல் ஓய்விற்கு வருகின்றது.

(C) காலம் $t_0 - t_4$ இன் போது துணிக்கை சென்ற மொத்தத் தூரம் $s - t$ வளையியின் கீழ் உள்ள பரப்பிளவிற்குச் சமம்.

மேற்குறித்த கூற்றுகளில்,

1. (A) மாத்திரம் உண்மையானது.
2. (A), (B) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
3. (B), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
4. (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.
5. (A), (B), (C) ஆகிய எல்லாம் பொய்யானவை.

Ap-08, 16

64. ஒருவர் ஒரு குறித்த உயரத்திலிருந்து ஒரு பொருளைப் போடும் அதே வேளை வேறொரு பொருளை நிலைக்குத்தாகக் கீழ்நோக்கி எறிகின்றார். இரு பொருள்களுக்குமான வேக ($v$) - நேர (t) வளையிகளைப் பின்வரும் வரைபுகளில் எது மிகச் சிறந்த விதத்தில் வகைக்குறிக்கின்றது? (வளையி $A$ ஆனது போடப்படும் பொருளை வகைக்குறிக்கும் அதே வேளை வளையி $B$ ஆனது எறியப்படும் பொருளை வகைகுறிக்கின்றது.)




Ap-09, 17

## 02. நியூட்டனின் விதிகள்

01. திணிவு $5M$ ஐ உடைய இரும்புப்பாதைத் கார் ஒன்று ஒப்பமான கிடைப்பாதை ஒன்றிலே இருக்கின்றது. $8\ m\ s^{-1}$ இற் செல்கின்ற திணிவு $3M$ ஐ உடைய எஞ்சின் ஒன்று இரும்புப்பாதைக் காருடன் மோதி இணைந்து கொள்கின்றது. மொத்தலுக்குப் பின்னர் எஞ்சினின் கதி,

(1) $1.6\ m\ s^{-1}$ (2) $3\ m\ s^{-1}$ (3) $4.8\ m\ s^{-1}$
(4) $5\ m\ s^{-1}$ (5) $8\ m\ s^{-1}$

Au -92

02. A எனும் எஞ்சினொன்று $m$ திணிவுடைய B எனும் ஒரு வண்டியைக் கிடைப்பாதை யொன்றில் இழுத்துச் செல்கிறது. A, B ஆகியவற்றின் மீதான மொத்த உராய்வு விசைகள் முறையே $F_1$, $F_2$ ஆகும்.




எஞ்சினானது $f$ எனும் சீரான ஆர்முடுகலுடன் இயங்கும் பொழுது, பின்வருவனவற்றுள் எது இழையிலுள்ள இழுவையைத் தரும்?

(1) $F_1 + F_2 + mf$ (2) $F_2 + mf$ (3) $F_2$
(4) $mf$ (5) $F_1 + F_2 - mf$

Au -79

03. படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு $2M, M, M$ எனும் மூன்று திணிவுகள் ஒப்பமான தரைமீது வைக்கப்பட்டுள்ளன. A மீது ஒரு கிடைவிசை $P$ தாக்கும்போது B யிற்கும் C யிற்கும் இடையேயுள்ள மறுதாக்கம்




(1) $4P$ (2) $2P$ (3) $P$
(4) $P/4$ (5) $P/2$

Au -80

04. மாறா வேகத்துடன் செல்லும் புகையிரதப் பெட்டியொன்றில் உட்காந்திருக்கின்ற சிறுவனொருவன் பெட்டியினுள் நேர் மேலாக வளிக்குள் ஒரு பந்தை எறிகிறான். அவன் புகையிரதம் இயங்கும் திசையை நோக்கி இருக்கிறான் எனவும், புகையிரதப் பெட்டியினுள்ளே காற்றோட்டம் இல்லை எனவும் கொண்டால், பின்வரும் கூற்றுகளுள் எது உண்மையானது?

(1) பந்து அவனுக்குப் பின்னால் விழும்.
(2) பந்து அவனுக்கு முன்னால் விழும்.
(3) பந்து அவனது கையில் விழும்.
(4) பந்து அவனது வலப்பக்கத்தில் விழும்.
(5) பந்து அவனது இடப்பக்கத்தில் விழும்.

Au -80

05. 500 g திணிவும் 100 g திணிவுமுள்ள இரு ஈயக்கோளங்கள் இலேசான இழையொன்றின் நுனிகளிற் கட்டப்பட்டுள்ளன. உயரமான ஒரு கட்டிடத்தின் உச்சியிலிருந்து இது போடப்படுகின்றது. பிசுக்கு விளைவுகள் புறக்கணிக்கப் படுமாயின், அது விழும் போது இழையின் இழுவை,

(1) 0 (2) 100 g (3) 400 g
(4) 500 g (5) 600 g

Au -80

06. 1000 kg சீனியையும் ஒரு விற்றராசையும் எடுத்துக் கொண்டு ஒருவன் உயரமானதொரு மலையின் உச்சிக்குச் சென்று, 1 kg கொண்ட சீனிப்பக்கெற்றுக்களைத் தயாரிக்கத் தொடங்கினான்.

(A) அவன் 1000 சீனிப் பக்கெற்றுக்களைத் தயாரிப்பான்.
(B) அவன் 1000 இற்குக் குறைந்த சீனிப் பக்கெற்றுக்களைத் தயாரிப்பான்.
(C) அவன் 1000 இற்கு மேற்பட்ட சீனிப் பக்கெற்றுக்களைத் தயாரிப்பான்.
(D) அவன் அச்சீனிப் பக்கெற்றுகளில் ஒன்றை மலையின் அடிவாரத்துக்குக் கொண்டு வந்து நிறுப்பானாயின், அச்சீனிப்பக்கெற்றின் திணிவானது 1 kg இலும் பார்க்கக் கூடவாக இருக்கும்.

மீயுந்தல் விளைவுகள் புறக்கணிக்கத்தக்கனவாயின், மேலுள்ள கூற்றுகளுள்,

(1) A மாத்திரம் உண்மையானது.
(2) B மாத்திரம் உண்மையானது.
(3) C மாத்திரம் உண்மையானது.
(4) B, D மாத்திரம் உண்மையானவை.
(5) C, D மாத்திரம் உண்மையானவை.

Au -80

07. பொருளொன்றின் நிறையானது பூமியில் 100 N ஆகவும், சந்திரனில் 17 N ஆகவும் உள்ளது. சந்திரனில் சுயாதீனமாக விழும் பொருளின் ஆர்முடுகல்,

(1) $10\ m s^{-2}$ (2) $1.7\ m s^{-2}$ (3) $17\ m s^{-2}$
(4) $10/1.7\ m s^{-2}$ (5) $0.17\ m s^{-2}$

Au -81

08. உராய்வின்றிய ஒரு கப்பியைச் சுற்றிச் செல்கின்ற இலேசான இழையொன்று படத்திற் காட்டப்பட்டுள்ளது. இழையின் நுனிகளில் ஒன்றை ஒரு குரங்கு பிடித்துக்கொண்டு தொங்குகிறது. இழையின் மற்றைய நுனியிலே, குரங்கு இருக்கும் அதே மட்டத்தில், குரங்கின் நிறைக்குச் சமனான தள ஆடியொன்று தொங்க விடப்பட்டிருக்கிறது. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக. குரங்கு ஆடியிலே தன் விம்பத்தைப் பார்த்தலைத் தவிர்ப்பதற்கு,



(A) இழை வழியே ஏற வேண்டும்.
(B) இழை வழியே இறங்க வேண்டும்.
(C) இழையைக் கைவிடவேண்டும்.

இக் கூற்றுக்களுள்,

(1) A மாத்திரம் உண்மையானது.

(2) B மாத்திரம் உண்மையானது.
(3) C மாத்திரம் உண்மையானது.
(4) A, B, C ஆகிய யாவும் உண்மையானவை.
(5) A, B, C ஆகிய யாவும் பொய்யானவை.

Au -80

09. சுமையேற்றப்பட்ட துரொல்லி ஒன்று 50 N விசையுடன் கிடையான ஒரு மேசை மீது இழுக்கப்படுகின்றது. இத் துரொல்லியானது ஒரு ரிக்கர் அதிரியினூடாக ஒரு கடதாசி நாடாவை இழுத்துச் செல்கிறது. இந்த நாடாவின் ஒரு பகுதி (1) இற் காட்டப்பட்டுள்ளது. இத்தொகுதியில் ஏற்படுத்தப்படும் பல்வேறு மாற்றங்களுடன் மேன்மேலும் நாடாப் பதிவுகள் எடுக்கப்படுகின்றன. நாடா(2) இணைப்பை பின்வருவனவற்றுள் எது ஏற்படுத்தி இருக்கலாம்.

(1)



(2)



(1) விசையானது 100 N ஆக உயர்த்தப்பட்டமை.
(2) துரொல்லியிலுள்ள சுமையானது இரட்டிப்பாக்கப்பட்டமை.
(3) துரொல்லியிலுள்ள சுமையானது அரைவாசியாக்கப்பட்டமை.
(4) அதிரியின் வீதம் அரைவாசியாக்கப்பட்டமை.
(5) விசையானது 25 N ஆகக் குறைக்கப்பட்டமை.

Au -81

10. முறையே 2 kg, 8 kg எனுந் திணிவுகளையுடைய A, B எனும் இரு பொருட்கள் உராய்வு அற்ற பரப்பின் மீது ஓய்வாயுள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே சரியாக 1 செக்கனுக்கு 2 N எனும் விசையொன்று பிரயோகிக்கப்படுகிறது. இந்த ஒரு செக்கனின் முடிவில் A யானது $u$ எனும் வேகத்தை அடையுமாயின் B யினது ஒத்த வேகம்,

(1) $4u$ (2) $2u$ (3) $u$
(4) $u/2$ (5) $u/4$

Au -81

11.




அருகில் தரப்பட்ட படத்தில், குற்றிகள் மேலுள்ள உராய்வு விசைகள் புறக்கணிக்கக்கூடியன. பிரயோகிக்கப்படும் விசை $F$ ஆயின், தொடுக்கும் இழையிலுள்ள இழுவை என்ன?

(1) பூச்சியம் (2) $\frac{F}{2}$ (3) $F$

(4) $\frac{m_1 F}{m_1 + m_2}$ (5) $\frac{m_2 F}{m_1 + m_2}$

Au -82

12. 10 kg திணிவுடைய கோளம் A ஒன்று 5 m s$^{-1}$ கதியுடன் வலம் நோக்கி அசைந்து 5 kg திணிவுடைய நிலையான கோளமொன்றுடன் நேரடியாக மோதுகிறது. மோதுகை நடந்தேறிய உடனேயான வேகங்களை பின்வருவனவற்றுள் எது குறிப்பிடாது? (எல்லா வேகங்களும் வலம் நோக்கியவையாகும்.)

(1) $\frac{10}{3}\ m\ s^{-1}$, $\frac{10}{3}\ m\ s^{-1}$
(2) $3\ m\ s^{-1}$, $4\ m\ s^{-1}$
(3) $2\ m\ s^{-1}$, $6\ m\ s^{-1}$
(4) $\frac{5}{3}\ m\ s^{-1}$, $\frac{20}{3}\ m\ s^{-1}$
(5) $0\ m\ s^{-1}$, $10\ m\ s^{-1}$

Au -82

13. அருகில் தரப்பட்டுள்ள படத்தில் பிரயோகிக் கப்படும் விசை $F$ திணிவற்றதும் உராய்வற்றதுமான கப்பி கருதப்படலாம். $m$ இல் தாக்கும் உராய்வு விசை $f$ ஆயின் திணிவு $m$ இன் ஆர்முடுகல்,




(1) $\frac{F}{m}$
(2) $\frac{(F-f)}{m}$
(3) $\frac{(F+f)}{m}$
(4) $\frac{F}{2m}-\frac{f}{m}$
(5) $\frac{F}{2m}+\frac{f}{m}$

Au -82

14. $A$ குறுக்கு வெட்டுப் பரப்புடைய குழலொன்றுக்கூடாக, $3v$ கதியில் கிடையாக வெளியேற்றப்படும் சீரான நீர்த்தாரையொன்று, இக்கதியில் நிலைக்குத்தான சுவரொன்றை அடிக்கிறது. எல்லா நீரும் சுவருக்குச் செவ்வனாக $v$ கதியில் பின்னதைத்தாகவும் நீரினடர்த்தி $\rho$ ஆகவுமிருப்பின் இச்சுவர் மேல் தாக்கும் விசை,

(1) $4\rho v^2$
(2) $2A^2\rho v^3$
(3) $4A\rho v^2$
(4) $12A\rho v^2$
(5) $4A\rho v^2$

Au -82

15. 1,000 kg திணிவுடைய ஏற்றியொன்று 5 m s$^{-1}$ சீரான கதியுடன் கீழ் நோக்கி அசைகிறது. இவ்வேற்றி மாறாவமர்முடுகலுடன் 10 m தூரத்தில் ஓய்வுக்குக் கொண்டு வரப்படுகிறது. உராய்வு விசைகள் புறக்கணிக்கக் கூடியவையாயின் இவ்வமர்முடுகலின் போது தாக்கும் தடத்திலுள்ள இழுவை?

(1) 7,500 N
(2) 8,750 N
(3) 10,000 N
(4) 11,250 N
(5) 12,500 N

Au -83

16. புறக்கணிக்கத்தக்க நிறையுடைய ஒப்பமான (அழுத்தமான) கப்பியொன்று விற்றராசொன்றினால் தொங்கவிடப் பட்டுள்ளது. இக்கப்பிக்கு மேல் செல்லும் பாரமற்ற விரிவடையா இழை ஒன்றின் எதிர்முனைகளுக்கு 2 kg, 6 kg ஆகிய நிறைகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்நிறைகள் ஈர்ப்பின் கீழ் அசையவிடப்படுமாயின் விற்றிராசிலுள்ள வாசிப்பு,




(1) 2 kg (2) 3 kg (3) 4 kg
(4) 6 kg (5) 8 kg

Au -83

17. M திணிவுடைய ஒரு பொருள் B ஒப்பமான (அழுத்தமான) கிடை மேசையொன்றின் மேல் வைக்கப்பட்டு அம்மேசையின் மூலைக்குப் பொருத்தப்பட்டுள்ள ஒப்பமான கப்பி யொன்றுக்குப் மேலாகச் செல்லும் இழையொன்றுக்கு அதே திணிவுடைய பூனை A ஒன்று வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இழையில் தொங்கி அதில் ஏற முயற்சிக்கிறது. இச் செய்கையின் போது பொருள் B யானது கப்பியை நோக்கி ஆர்முடுகல் g (ஈர்ப்பு ஆர்முடுகலுடன்) அசைகிறது. பூனை A யின் இயக்கத்தைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானது?




(1) புவி சார்பாக மாறாவார்முடுகல் g உடன் A மேல் நோக்கியசையும்.
(2) புவி சார்பாக மாறாவார்முடுகல் 2g உடன் A மேல் நோக்கியசையும்.
(3) A யின் புவி சார்பான ஆர்முடுகல் பூச்சியமாகும்.
(4) புவி சார்பாக ஆர்முடுகல் g யுடன் A கீழ் நோக்கியசையும்.
(5) புவி சார்பாக மாறாவார்முடுகல் g/2 உடன் A கீழ் நோக்கியசையும்.

Au -83

18. *W* நிறையுடைய மனிதனொருவன் கிடையான தரையொன்றில் நின்றுகொண்டு, படத்தில் காட்டப்பட்டவாறு நிலையான கப்பி ஒன்றினுதவியுடன், P நிறையுடைய சுமை யொன்றைத் தாங்குகிறான். தரையின் மேல் இம் மனிதனால் பிறப்பிக்கப்படும் விசை,




(1) *W* (2) *P* (3) *W - P*
(4) *P - W* (5) *P + W*

Au -87

19. துரொல்லி A யானது கிடைத் தளம் ஒன்றின் மீதுள்ளது. B யானது m திணிவுடைய ஒரு மரக் குற்றியாகும். இத் துரொல்லிக்கும், குற்றிக்கும் இடையிலுள்ள நிலையியல் உராய்வுக்குணகம் μ ஆயிருப்பின், இக் குற்றியானது கீழே சறுக்குவதைத் தடுப்பதற்கு இத்துரொல்லி கொண்டிருக்கவேண்டிய இழிவு ஆர்முடுகல்,




(1) $\frac{g}{\mu}$ வலது பக்கத்திற்கு (2) g வலது பக்கத்திற்கு

(3) $\frac{g}{\mu}$ இடது பக்கத்திற்கு (4) μg வலது பக்கத்திற்கு

(5) $\frac{mg}{\mu}$ வலது பக்கத்திற்கு

Au -95

20. $v$ கதியுடன் அசையும் $m$ திணிவுடைய வாயு மூலக்கூறொன்று, $60^0$ படுகோணத்தில் மேற்பரப்பொன்றின் மேலடித்து அதே கோணத்தில் தெறிப்படைகிறது. இவ்வாயு மூலக்கூறின் மொத்தவுந்த மாற்றம்,

(1) $\frac{mv}{2}$ (2) $\frac{\sqrt{3}mv}{2}$ (3) $mv$

(4) $\sqrt{3}.mv$ (5) $2mv$

Au -85

21. ஒப்பமான கிடை மேசையொன்றின் மேல் ஓய்விலுள்ள 950 g திணிவுடைய மரக்குற்றியொன்றினுள் குடைப்பாதை யொன்றுக்கூடாக 10 m s$^{-1}$ என்ற வேகத்துடன் 50 g திணிவுடைய துணிக்கையொன்று கிடையாக எறியப்படுகிறது. இக்குடைபாதையின் நிலைக்குத்துப் பகுதியிற் AB க்கூடாகச் சென்று பின்னர் இத்துணிக்கை குற்றியிலுள்ள புள்ளி B யுடன் மோதி ஓய்வுக்கு வருகிறது. இத்துணிக்கைக்கும் குற்றிக்கு மிடையில் உராய்வில்லையெனின் இக்குற்றியின் வேகம்.




(1) 0.5 m s$^{-1}$ (2) 1.0 m s$^{-1}$ (3) 1.5 m s$^{-1}$

(4) 5.0 m s$^{-1}$ (5) 10.0 m s$^{-1}$

Au -86

22. பாலூட்டிபொன்றின் இருதயத்தில், ஒவ்வொரு துடிப்பின் போதும் ஏறக்குறைய 20 கிராம் இரத்தமானது 0.10 s நேரத்தில் 0.25 m s$^{-1}$ கதியிலிருந்து 0.35 m s$^{-1}$ என்பதற்கு ஆர்முடுக்கப்படுகிறது. இருதயத் தசைநாரினால் பிரயோகிக்கப்படும் சராசரி விசையினது பருமன்,

(1) 0.002 N (2) 0.02 N (3) 2 N

(4) 20 N (5) 200 N

Au -90

23. முறையே $M, m$ திணிவுள்ள A, B என்னும் இரு குற்றிகள் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஒப்பமான கிடை மேசை ஒன்றின் மீது ஒன்றையொன்று தொடுமாறு வைக்கப்பட்டுள்ளன. ஒரு கிடை விசை $F$ ஆனது A மீது பிரயோகிக்கப்படுகின்றது. B யில் தாக்கும் விசையின் பருமன்?




(1) 0　　(2) $F$　　(3) $\frac{mF}{M+m}$

(4) $\frac{mF}{M}$　　(5) $\frac{MF}{m}$

Au -89

24. ஒவ்வொன்றும் 10 N நிறையுள்ள சர்வசமனான இரு குற்றிகள் உரு$(a)$ இலும் உரு$(b)$ இலும் காட்டப்பட்டுள்ளவாறு ஒப்பமான இரு கிடை மேசைகளின் மீது வைக்கப்பட்டுள்ளன. உரு$(a)$ இலே இக்குற்றியானது நீட்டமுடியாத இழை ஒன்றினால் கட்டப்பட்டுள்ளது. இவ்விழை உராய்வின்றிய ஒரு கப்பிக்கு மேலாகச்சென்று, 10 N நிறையுள்ளதும் சுயாதீனமாகத் தொங்குகின்றதுமான இன்னொரு குற்றியுடன் இணைக்கப் பட்டுள்ளது. உரு$(b)$ இலே அத்தகைய ஒத்த இழை ஒன்று குற்றியினாற் கட்டப்பட்டுள்ளது. உராய்வின்றிய ஒரு கப்பிக்கு மேலாகச் செல்கின்ற இவ்விழை 10 N என்னும் நிலைக்குத்தான கீழ்முக விசை ஒன்றினால் இழுக்கப்படுகின்றது. இவ்வொழுங்கமைப்பிலே,




(1) உரு $(b)$ இல் மேசையின் மீது இருக்கும் குற்றி கப்பியை நோக்கி ஆர்முடுகும், ஆனால் உரு$(a)$ இல் அவ்வாறில்லை.
(2) உரு$(a)$, உரு$(b)$ ஆகிய இரண்டிலும் குற்றிகளின் ஆர்முடுகல் சமம்.
(3) உரு$(a)$ இற் குற்றியின் ஆர்முடுகல் பெரியது.
(4) உரு$(b)$ இற் குற்றியின் ஆர்முடுகல் பெரியது.
(5) உரு$(a)$ யிலும் உரு$(b)$ இலும் உள்ள குற்றிகள் ஆர்முடுகுவதில்லை.

Au -89

25. $v$ கதியுடன் அசையும் $m$ திணிவுடைய துணிக்கை யொன்று பரப்பொன்றை 45° கோணத்தில் அடித்து படத்தில் காட்டப்பட்டுள்ளது போல அதே கோணத்தில் அதே கதியுடன் தெறிப்படைகின்றது. இத்துணிக்கையின் மொத்த உந்தமாற்றம்,




(1) 0　　(2) $\sqrt{2}\,mv$　　(3) $2\sqrt{2}\,mv$

(4) $2mv$　　(5) $mv$

Au -90

26. பொருளொன்று கரடான மேசையொன்றின் மீது வைக்கப்பட்டு மாறாவிசையொன்றினால் $t_o$ ஆயிடை நேரத்துக்கு இழுக்கப்பட்டு பின்னர் இவ்விசை அகற்றப்பட்டு ஓய்வுக்கு வர விடப்படுகிறது. இப்பொருளினது வேகம்($v$) இனது நேரம்($t$) உடனான மாறல் படத்தில் காட்டப்பட்டுள்ளது. பின்வரும் வளையிகளில் எது பொருளின் மீது தாக்கும் விளையுள் விசை ($F$) இனது நேரம் ($t$) உடனான மாறலைத் திறம்பட வகைக்குறிக்கின்றது?







Au -90

27. உராய்வற்ற சக்கரவண்டி(trolley) ஒன்று அதற்குக் கட்டப்பட்டுள்ளவையும், சமாந்தரமானவையும், ஒவ்வொன்றும் $l$ நீளமுடையவையுமான மூன்று மீளியல் இழைகளினுதவியுடன் கிடையான மேசையொன்றின் மீது இழுக்கப்படுகிறது. ஒவ்வொரு இழையினதும் விரிவு $x$ ஆயிருக்கையில் இச்சக்கரவண்டியினது ஆர்முடுகல் 12 cm $s^{-2}$ ஆயிருக்கிறது. இம்மீளியல் இழைகள் இப்போது $3l$ நீளமுடைய ஒரு இழையை உருவாக்கும் வகையில் முனைக்கு முனை பொருத்தப்பட்டு, சக்கரவண்டிக்கு அதன் ஒரு முனை கட்டப்பட்டு, கூட்டு இழை $3x$ நீளத்தினால் விரிவடையும் வகையில் இழுக்கப்படுகிறது. இச்சக்கர வண்டியினது தற்போதைய ஆர்முடுகல்,

(1) 36 cm $s^{-2}$ (2) 18 cm $s^{-2}$ (3) 12 cm $s^{-2}$
(4) 6 cm $s^{-2}$ (5) 4 cm $s^{-2}$

Au -90

28. இரு பொருட்களுக்கிடையிலான மோதுகையொன்றில், ஏகபரிமாண உந்தம் காப்படைவது,

(1) இயக்கப்பாட்டுச் சக்தி காப்படையும்போது மாத்திரமே.
(2) மொத்தப் பொறிமுறைச் சக்தி காப்படையும்போது மாத்திரமே.
(3) இப்பொருட்கள் நிரந்தரமாக வடிவழியாதிருக்கும்போது மாத்திரமே.
(4) இப்பொருட்கள் மீது வெளிவிசைகள் தாக்காதிருக்கும்போது மாத்திரமே.
(5) எப்போதும்.

S -91

29. 0.1 kg திணிவுடைய பந்தொன்று சுவரென்றின் மீது $10\, m\, s^{-1}$ என்ற கதியுடன் நேராக எறியப்பட்டபோது அது அதே கதியுடன் எதிர்த்திசை வழியே பின்னதைவடைகிறது. இப்பந்தினது சுவருடன் 0.02 s இந்த தொடுகையிருப்பின் இப்பந்து சுவரின்மீது ஏற்படுத்திய விசை,

(1) 200 N (2) 100 N (3) 20 N
(4) 0.01 N (5) 0.002 N

S -91

30. ஒரு மாறா வேகம் $(v)$ உடன் X-திசையில் அசையும் பொருளொன்றில், $t$ நேரநீடிப்புக்கு $y$ - திசையில் மாறா வெளிவிசை $F$ ஒன்று தாக்குகிறது. XY தளத்தில் இப்பொருளினது பாதையைத் திறம்பட வகைக் குறிப்பது,




S -91

31. $m$ திணிவுடைய பொருளொன்று, படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, கரடான சாய்தளமொன்றின் மீது சறுக்காது மட்டுமட்டாக ஓய்விலுள்ளது. இத்தளத்தின் சாய்வு 30° இலிருந்து 60° இற்கு அதிகரிக்கப்படும்போது, இப்பொருள்,

(1) $g/\sqrt{3}$ என்ற ஆர்முடுகலுடன் அசையும்.
(2) $\sqrt{3}g/2$ என்ற ஆர்முடுகலுடன் அசையும்.
(3) $\frac{g}{2}(\sqrt{3}-1)$ என்ற ஆர்முடுகலுடன் அசையும்.
(4) g என்ற ஆர்முடுகலுடன் அசையும்.
(5) $g/2$ என்ற ஆர்முடுகலுடன் அசையும்.




S -91

32. ஒப்பமான உலோக மேற்பரப்பு ஒன்றின் மீது தொடக்கத்தில் ஓய்விலிருக்கின்ற குறித்த திணிவு ஒன்றின் மீது 4 N என்னும் மாறா விசை ஒன்று 0.5 s இற்குத் தாக்குகின்றது. SI அலகுகளிலே திணிவின் இறுதி உந்தம்,

(1) 1 (2) 2 (3) 4
(4) 8 (5) 16

S -92

33. பின்வரும் கணியங்களில் எது, விசையை நேரத்தினால் பெருக்குவதைக் கொண்டு கணிக்கப்படும்?

(1) ஆர்முடுகல் (2) உந்தம் (3) வேகம்
(4) இயக்கசக்தி (5) வலு

Au -93

34. ஏரி ஒன்றிலே ஓய்வில் மிதக்கும் தட்டையான அடித்தளத்தைக் கொண்ட படகு ஒன்றின் எதிர் அந்தங்களில் இருவர் நிற்கிறனர். ஒருவர் மற்றவரை நோக்கிப் பந்து ஒன்றைக் கிடையாக எறிகின்றார். மற்றவர் அப்பந்தைப் பிடித்து அசைக்காமல் வைத்திருக்கிறார். இங்கு உராய்வு விளைவுகள் புறக்கணிக்கத்தக்கனவெனின், படகு,

(1) பந்து செல்லும் திசைக்கு எதிரான திசையிற் செல்லும்.
(2) பந்து செல்லும் திசையை ஒத்த திசையிற் செல்லும்.
(3) பந்து செல்லும் திசைக்கு எதிரான திசையிற் சென்று, இரண்டாம் ஆள் பந்தை பிடிக்கும் போது ஓய்வுக்கு வரும்.
(4) பந்து செல்லும் திசையை ஒத்த திசையிற் சென்று, இரண்டாம் ஆள் பந்தை பிடிக்கும் போது ஓய்வுக்கு வரும்.
(5) நிலையாக இருக்கும்.

S -92

35. திணிவு $m$ ஐ உடைய குற்றி ஒன்று ஒப்பமான கிடைமேசை ஒன்றின் மீது வைக்கப்பட்டு, அதன் மீது மாறா விசை ஒன்று கிடையாகப் பிரயோகிக்கப் படுகின்றது. இச்செயலைப் புவியிலும் சந்திரனிலும் செய்தால், குற்றி சந்திரனின் மீது அடையும் ஆர்முடுகல்,

(1) புவி மீது அடையும் பெறுமானத்தின் இரு மடங்காக இருக்கும்.
(2) புவி மீது அடையும் பெறுமானத்தின் ஆறு மடங்காக இருக்கும்.
(3) புவி மீது அடையும் பெறுமானத்தின் $\frac{1}{2}$ மடங்காக இருக்கும்.
(4) புவி மீது அடையும் பெறுமானத்தின் $\frac{1}{6}$ மடங்காக இருக்கும்.
(5) ஒரேயளவாக இருக்கும்.

S -92

36. சந்திரனின் பரப்பிலிருந்து திணிவு $m$ ஐ உடைய விண்வெளிப் பயணி ஒருவர் தொடக்க நிலைக்குத்து ஆர்முடுகல் $5g'$ ஐ உடைய விண்வெளிக்கலம் ஒன்றிற் செலுத்தப்படுகின்றார். இங்கு $g'$ என்பது சந்திரனிலே சுயாதீன வீழ்ச்சியின் ஆர்முடுகலாகும். விண்வெளிப்பயணியின் மீது விண்வெளிக்கலத்தின் நிலைக்குத்து மறுதாக்கம்,

(1) பூச்சியம் (2) $mg'$ (3) $4mg'$
(4) $5mg'$ (5) $6mg'$

Au -92

37. 2 kg திணிவையுடைய பொருள் ஒன்று 9 N மாறா விளையுள் விசை ஒன்றினால் ஓய்விலிருந்து ஆர்முடுக்கப்படுகிறது. இப்பொருளானது 4 m தூரத்தைக் கடந்த பின்னர் அதனது கதி,

(1) 72 $m s^{-1}$ (2) 36 $m s^{-1}$ (3) 9 $m s^{-1}$
(4) 6 $m s^{-1}$ (5) 3 $m s^{-1}$

Au -94

38. நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்பட்ட பந்தொன்று எறிந்தவரின் கைக்குத் திரும்பி வருகிறது. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

(A) வளித்தடை இல்லாதிருப்பின், மேல்நோக்கிய பிரயாணத்திற்கும், கீழ்நோக்கிய பிரயாணத்திற்கும் எடுக்கும் நேரங்கள் ஒரேயளவாகும்.

(B) வளித் தடையிருப்பின், இப்பந்து எறியப்பட்ட கதியைவிடக் குறைவான கதியுடன் இப்பந்து எறிந்தவரின் கரத்தையடையும்.

(C) வளித்தடையிருப்பின், மேல்நோக்கிய பிரயாணத்திற்கு எடுக்கும் நேரம், கீழ்நோக்கியதற்குரியதை விடப் பெரியதாகும்.

மேலுள்ள கூற்றுகளில்

(1) A மாத்திரமே உண்மையானது.
(2) B மாத்திரமே உண்மையானது.
(3) C மாத்திரமே உண்மையானது.
(4) A, B ஆகியவை மாத்திரமே உண்மையானவை.
(5) A, B, C ஆகிய எல்லாமே உண்மையானவை.

Au -93

39. $x$ அச்சு வழியே $v$ கதியுடன் அசையும் $m$ திணிவையுடைய பொருளொன்று சடுதியாக இரு சர்வசமனான துண்டுகளாக உடைகிறது. உடைந்த துண்டுகளிலொன்று $y$ அச்சுக்குச் சமாந்தரமாக, அதன் நேர் திசையில் $v$ கதியுடன் அசையுமாயின், அடுத்த துண்டினது இயக்கத்தின் திசையைப் பின்வரும் வரிப்படங்களில் எது திறம்படச் சுட்டிக்காட்டுகிறது?



(1) (2) (3) (4) (5)

Au -93

40. 5 kg திணிவையுடைய பொருள் ஒன்று, வரைபில் காட்டப்பட்டுள்ளது போல, நேரம் $t$ யுடன் மாறும் விளையுள் விசை $F$ ஒன்றுக்கு உட்படுகிறது. காட்டப்பட்டுள்ள 10 s இல் இப் பொருளினால் பெறப்படும் உந்தம்,




(1) 0
(2) 5 N s
(3) 40 N s
(4) 50 N s
(5) 60 N s

Au -94

41. உருவில் காட்டப்பட்டுள்ளது போல, தளம் $F$ இன் மீது ஓய்வில் இருக்கும் 12 N நிறையையுடைய குற்றி B யின் மீது 4 N நிறையைக் கொண்ட குற்றி A யானது வைக்கப்பட்டுள்ளது. A யானது பாரமற்ற விறைப்பான கோல் ஒன்றினால் சுவருக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. A, B ஆகியவற்றுக்கும் B, F ஆகியவற்றுக்கும் இடையுள்ள நிலையியல் உராய்வுக் குணகம் ஓரேயளவாயும் $\frac{1}{4}$ இற்குச் சமமாயுமிருப்பின், B யை இடது பக்கத்துக்கு ஈர்ப்பதற்குத் தேவையான விசை P யினது இழிவுப் பெறுமானம்,




(1) 1 N (2) 2 N (3) 3 N
(4) 4 N (5) 5 N

Au -94

42. 0.4 kg திணிவு ஒன்று காட்டப்பட்டுள்ளவாறு, பாரமற்ற வில் ஒன்றினால் தொங்கவிடப்பட்டுள்ளது. 0.2 kg எனும் இரண்டாவது திணிவானது முதலாவதிலிருந்து இழை ஒன்றினால் தொங்கவிடப்பட்டுள்ளது. இத் தொகுதி சமநிலையில் இருக்கும்போது இவ்விழையானது எரிக்கப்பட்டது. 0.4 kg திணிவினது ஆரம்ப ஆர்முடுகல்,




(1) 10/3 $m\,s^{-2}$ ஆயிருக்கும் (2) 5 $m\,s^{-2}$ ஆயிருக்கும்.
(3) 20/3 $m\,s^{-2}$ ஆயிருக்கும் (4) 10 $ms^{2}$ ஆயிருக்கும்
(5) 20 $m\,s^{-2}$ ஆயிருக்கும்.

Au -94

43. நேர்கோடு ஒன்றின் வழியே அசையும் M திணிவுடைய துணிக்கை ஒன்றினது வேகம்($v$) -நேரம்($t$)வளையியானது உருவில் காட்டப் பட்டுள்ளது. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.




(A) இவ் வியக்கத்தின் முடிவிலே இத்துணிக்கை அதனது ஆரம்ப நிலைக்கு மீளுகிறது.
(B) இயக்கத்தின்போது இத்துணிக்கையினது ஆர்முடுகலானது திசையில் மாற்றம் அடையவில்லை.
(C) $t = t_o$ இல் இத் துணிக்கை மீது தாக்கும் கணத்தாக்கு முடிவற்றதாகும்.

மேலுள்ள கூற்றுகளுள்
(1) A மாத்திரமே உண்மையானது
(2) Bமாத்திரமே உண்மையானது.
(3) C மாத்திரமே உண்மையானது.
(4) A யும் B யும் மாத்திரமே உண்மையானது.
(5) A, B, C ஆகிய எல்லாமே உண்மையானவை.

Au -95

44. உராய்வற்ற தண்டவாளங்களின் மீது ஆரம்பத்தில் ஓய்விலுள்ள 10,000 kg திணிவுடைய வண்டி ஒன்றுக்கு உருவில் காட்டப்பட்டதுபோல நேரத்துடன் மாறுபடும் விசை(F) ஆனது பிரயோகிக்கப்படுகிறது. 100 s இன் பின்னர், இவ்வண்டியினது $m\,s^{-1}$ இலான கதி,




(1) 2.5 (2) 5
(3) 7.5 (4) 10 (5) 15

Au -96

45.



உருவில் காட்டப்பட்டுள்ளதுபோல, கிடைதிசையிலே மாறாக் கதியுடன் அசையும் நகர்த்தி வார் ஒன்றின்மீது t = 0 s நேரத்தில் பெட்டி ஒன்று நிலைக்குத்தாகப் போடப்படுகிறது. இப்பெட்டியானது இவ்வாரினது வேகத்தை $t_o$ நேரத்தில் அடையுமாயின், இவ்வாரினால் பெட்டியின் மீது ஏற்படுத்தப்படும் உராய்வு விசையின் பருமன் ($F$) இனது நேரம்($t$) உடனான மாறலைப் பின்வரும் வளையிகளில் எது திறம்பட வகைகுறிக்கிறது?




Au -96

46. S ஆனது இரு திணிவுகளுக்கிடையில் நெருக்கப்பட்டுள்ள ஒரு பாரமற்ற வில் ஆயிருக்க, இவ்விரு திணிவுகளும் இழை T ஒன்றினால் ஒன்றாகப் பிடிக்கப்பட்டுள்ளன. இவ்விழை வெட்டப்படும் போது 1 kg திணிவானது $20\,m\,s^{-1}$ வேகத்துடன் அசையுமாயின், 10 kg திணிவானது,

(1) $20\ m\,s^{-1}$ வேகத்துடன் அசையும்.
(2) $10\ m\,s^{-1}$ வேகத்துடன் அசையும்.
(3) $2\ m\,s^{-1}$ வேகத்துடன் அசையும்.
(4) $20/11\ m\,s^{-1}$ வேகத்துடன் அசையும்.
(5) $1\,m\,s^{-1}$ வேகத்துடன் அசையும்.




Au -96

47. ஒப்பக் கிடை மேசை ஒன்றின்மீது அசையும் ஒரு துணிக்கை A யானது இம் மேசையின்மீது ஓய்விலுள்ள இன்னுமொரு துணிக்கை B யின் மீது மோதுகின்றது. A யினது ஆரம்ப உந்தமானது பருமன் $p_o$ ஆயின், பின்வரும் வளையிகளில் எது நேரம்($t$)யுடன் இத்துணிக்கைகளின் உந்தங்களின்($p$) மாறலைத் திறம்பட வகைக்குறிக்கின்றது?




Au -96

48. ஒப்பக் கம்பி ஒன்றின் மீது செல்லும் பாரமற்ற இழையொன்று, உருவில் காட்டப்பட்டுள்ளது போல 1 kg திணிவுடைய விற்றராசு ஒன்றையும் 1 kg, 2 kg ஆகிய திணிவுகளையுடைய இரு நிறைகளையும் காவுகின்றது. இத் தராசின் மீதுள்ள வாசிப்பு




1. பூச்சியம்
2. 1 kg
3. 2 kg
4. 3 kg
5. 4 kg

Au-97

49. கிடையான திசையிலே இடப்பக்கத்தை நோக்கி 10 m s$^{-1}$ வேகத்தில் அசையும் $5 \times 10^{-2}$ kg களிமண் கட்டியொன்று, அதே கிடையான திசையில் வலப்பக்கம் நோக்கி 12 m s$^{-1}$ வேகத்தில் அசையும் $6 \times 10^{-2}$ kg களிமண் கட்டி ஒன்றை அடிக்கின்றது. மோதிய பின்னர் இவ்விரு கட்டிகளும் ஒன்றாக ஒட்டிக்கொள்கின்றன. இச்சேர்த்திப் பொருளானது அசையும் வேகம்

1. 0
2. 1 m s$^{-1}$
3. 2 m s$^{-1}$
4. 11 m s$^{-1}$
5. 22 m s$^{-1}$

Au-97

50. 5 kg திணிவையுடைய உடலொன்று, வரைபில் காட்டப்பட்டவாறு நேரம் ($t$) உடன் மாறுபடும் விசை($F$) இற்கு உட்படுத்தப்படுகிறது. இவ்வுடலினால் பெறப்பட்ட உந்தம்




1. 350 N s.
2. 80 N s.
3. 70 N s.
4. 40 N s
5. 0

Au-98

51. சோடா நீரைக் கொண்டுள்ள போத்தல் ஒன்றைத் திறந்தபோது, வாயுக் குமிழிகள் சோடா நீரில் மேலெழுகின்றன. எல்லா வாயுக் குமிழிகளினதும் ஆரம்ப ஆர்முடுகல் $a$ எனக் கருதுக. இப்போத்தலானது சுயாதீனமாக விழும்போது, இப்போத்தல் சார்பாக, வாயுக் குமிழிகள்

1. அதே ஆர்முடுகல் $a$ உடன் மேலேழும்.
2. ஆர்முடுகல் $(a + g)$ உடன் மேலெழும்.
3. ஆர்முடுகல் $(a - g)$ உடன் மேலெழும்.
4. நிலையாகத் தொடர்ந்திருக்கும்.
5. ஆர்முடுகல் $a$ உடன் கீழ்நோக்கி அசையும்.

Au-99

52. $F_1 (= 10\text{ N})$, $F_2 (= 9\text{ N})$ ஆகிய இரு விசைகள் உருவில் காட்டப்பட்டுள்ளது போல, நிலையான பொருளொன்றுக்கு ஒருங்கமை $t = 0$ நேரத்தில் பிரயோகிக்கப்படுகின்றன. விசை $F_2$ ஆனது பின்னர் $t = t_1$ இல் சடுதியாக 10 N இற்கு அதிகரிக்கப்பட்டு, $t = 2t_1$ நேரத்தில் விசை $F_1$ ஆனது முற்றாக அகற்றப்பட்டது. பின்வரும் வரைபுகளில் எது வேகம் ($v$) இனது நேரம் (t) உடனான மாற்றத்தைத் திறம்பட வகைகுறிக்கிறது?







Au-98

53. குற்றி ஒன்று சாய்தளம் ஒன்றின் மேலே ஓய்விலுள்ளது, இச்சாய்தளத்தினது கிடையுடனான சாய்வு (θ) ஆனது மாற்றப்படக் கூடியது. பின்வரும் வரைபுகளில் எது இக்குற்றிக்கும் தளத்துக்குமிடையிலான உராய்வு விசை $F$ இனது θ உடனான மாறலைத் திறம்பட வகைகுறிக்கிறது?




Au-98




54. உருவிலே காட்டப்பட்டுள்ளதுபோல, ஒரு கப்பித் தொகுதிக்கு மேலாகப் போகும் இழை ஒன்றின் சுயாதீன முனைக்கு விசை $F$ ஒன்றைப் பிரயோகிப்பதன் மூலம் திணிவு $m$ ஆனது அதன் இடத்திலே நிலையாக வைக்கப்பட்டுள்ளது. இக் கப்பிகள் பாரமற்றவையும், உராய்வற்றவையுமாகும். இவ்விழையின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள இழுவைகள் $T_1, T_2, T_3, T_4, T_5$ என்பவற்றினால் வகை குறிக்கப்படுமாயின்,

1. $T_1 = T_3 + T_2 + T_5$
2. $T_4 = T_2 + T_5$
3. $T_4 > mg$
4. $T_5 > T_1$
5. $T_4 = mg$

Au-98 -O

55. மாறா விளையுள் விசையொன்றினால் ஓய்வுக்குக் கொண்டு வரப்படும் பொருள் ஒன்றினது வேகம் $v$ இனது நேரம் $t$ உடனான மாறலைப் பின்வரும் வரைபுகளில் எது திறம்பட வகைகுறிக்கிறது?




1. 2. 3. 4. 5. Au-99

56. 


$m_1, m_2$ ஆகிய திணிவுகளை உடைய $(m_2 > m_1)$ $P$, $Q$ என்ற இரு குற்றிகள் ஒப்பமான கிடை மேசை ஒன்றின் மீது வைக்கப்பட்டுள்ளன. இவ்விரு குற்றிகளும், நெருக்கிய பாரமற்ற ஒரு வில் $C$ யினது நுனிகளுக்குப் பொருத்தப்பட்டிருப்பதுடன், உருவிலே காட்டப்பட்டுள்ளவாறு, ஒரு இழை $S$ இனால் நிலையாகப் பிடிக்கப்பட்டுமுள்ளன. இவ்விழை வெட்டப்படும்போது

(A) இக்குற்றிகளினது மொத்த உந்தம் பூச்சியமாகத் தொடர்ந்திருக்கும்.

(B) வில்லினால் குற்றிகளின்மீது உஞற்றப்படும் விசைகள் பருமனில் சமமானவையாகும்.

(C) ஆரம்பத்தில் குற்றி $P$ ஆனது $Q$ வை விட விரைவாக அசையும்.

மேலுள்ள கூற்றுக்களில்

1. (A) மாத்திரம் உண்மையானது.
2. (B) மாத்திரம் உண்மையானது.
3. (A) யும் (B) யும் மாத்திரம் உண்மையானவை.
4. (B) யும் (C) யும் மாத்திரம் உண்மையானவை.
5. (A), (B), (C) ஆகிய யாவும் உண்மையானவை.

Au-99

57. முறையே 2 kg, 1 kg ஆகிய திணிவுகளை உடைய இரு குற்றிகளான $A$ யும் $B$ யும், உராய்வற்ற மேசையொன்றின் மீது தொடுகையில் உள்ளன. உருவில் காட்டப்பட்டவாறு, ஒரு கிடை விசை $F$ ஆனது $A$ யின் மீது பிரயோகிக்கப்பட்டபோது $B$ யினால் $A$ யின் மீது உஞற்றப்படும் விசை 1 N ஆயிருக்கிறது. இதற்குப் பதிலாக இதே விசை B யிற்கு எதிர்த்திசையில் பிரயோகிக்கப்படும் போது, $A$ யினால் $B$ யின் மீது உஞற்றப்படும் விசை




1. 0.5 N  2. 1 N  3. 2 N
4. 4 N  5. 5 N

Au-99

58. திணிவு $M$ ஐ உடைய பின்வரும் பொருள்களில் எது அதியுயர் ஆர்முடுகலை உடையது?




Au-00

59. ரொக்கெற்று ஒன்று புவியின் மேற்பரப்பிற்குச் செங்குத்தாகப் புவியிலிருந்து அப்பால் செல்லும்போது அதில் உள்ள எரிபொருளின் திணிவு ($m$) ஆனது நேரம் ($t$) யுடன் குறையும் விதத்தை வரைபு காட்டுகின்றது. வளிமண்டலத் தடை புறக்கணிக்கப்படுவதாகவும் எரிபொருளின் மூலம் உண்டாக்கப்படும் உதைப்பு தொடர்ந்து மாறிலியாகவும் இருக்கும் எனின், ரொக்கெற்றின் வேகம் ($v$) ஆனது நேரம் ($t$) உடன் மாறும் விதத்தைப் பின்வரும் வரைபுகளில் எது மிகச் சிறந்த முறையில் வகைகுறிக்கின்றது?







Au-00

60. இரு திணிவுகள் இலேசான இழை ஒன்றினாலே தொடுக்கப்பட்டு, ஓப்பமான கிடை மேசை ஒன்றின் மீது வைக்கப்பட்டு உருவில் காணப்படுகின்றவாறு இழுக்கப்படுகின்றன.




இரு திணிவுகளையும் தொடுக்கும் இழையில் உள்ள இழுவை யாது?

1. 4N 2. 8N 3. 12N
4. 20N 5. 30N

Au-01

61. உருவில் காட்டப்பட்டுள்ளவாறு கிடை மேற்பரப்பு ஒன்றின் மீது உள்ள திணிவு 2 kg யை உடைய பொருள் ஒன்றின் மீது ஒரு விசை $P$ பிரயோகிக்கப் படுகின்றது. இரு மேற்பரப்புகளுக்கு மிடையே உள்ள இயக்கப்பாட்டு உராய்வுக் குணகம் 0.5 ஆகும். பொருள் சீர் வேகத்துடன் இயங்குமெனின், பொருளின் மீது உள்ள செவ்வன் விசை $R$ ஆனது




1. 10N 2. $10\sqrt{2}$ N 3. 20N
4. $20\sqrt{2}$ N 5. 40 N

Au-00

62. $A$, $B$ என்னும் இரு சம திணிவுகள் இலேசான, நீட்டமுடியாத இழை ஒன்றிலே தொடுக்கப்பட்டு, உருவில் காணப்படுகின்றவாறு ஒப்பமான, இலேசான கப்பி ஒன்றின் மேலோக அவ்விழை அனுப்பப்பட்டுள்ளது. திணிவு $B$ கீழ்நோக்கி இழுத்து நிலையாக வைக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றது. பின்னர் நிகழும் $B$ யின் இயக்கம் பற்றிப் பின்வரும் கூற்றுக்களில் எது திருத்தமானது.




1. $B$ தொடக்கத் தானத்திற்குத் திரும்பச் செல்லும்.
2. $B$ மேலும் கீழும் அலைந்து ஓய்வுக்கு வரும்.
3. $B$ நிலையாக இருக்கும்.
4. $B$ கீழ்நோக்கிச் செல்லத் தொடங்கும்.
5. $B$ மேல்நோக்கிச் செல்லத் தொடங்கும்.

Au-01

63. ஒப்பமான மேசை ஒன்றின் மீது உள்ள $m$, $4m$ என்னும் இரு திணிவுகள் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு வில்லுக்கு எதிராக நெருக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இரு திணிவுகளும் விடுவிக்கப்படும்போது அவற்றின் கதிகள் $V_A$ யிற்கும் $V_B$ யிற்குமிடையே உள்ள தொடர்பு




1. $V_A = V_B$ 2. $V_A = 2V_B$ 3. $V_A = 4V_B$
4. $2V_A = V_B$ 5. $4V_A = V_B$

Ap-02

64. 0.05 kg திணிவுள்ள கொல்ப் பந்து ஒன்று ஒரு கொல்ப் மட்டையினால் அடிக்கப்பட்டதும் $70\ m\ s^{-1}$ வேகத்துடன் செல்கின்றது. கொல் மட்டையுடன் பந்து தொடுகையில் இருக்கும் நேரம் $5 \times 10^{-4}$ s எனின், பந்தின் மீது கொல்ப் மட்டையினால் பிரயோகிக்கப்படும் இடை விசை

1. $5.0 \times 10^5$ N 2. $2.5 \times 10^5$ N 3. $7.0 \times 10^3$ N
4. $1.4 \times 10^3$ N 5. $1.2 \times 10^3$ N

Ap-03

65. ஒப்பமான கிடை மேசை மீதுள்ள ஒரு பொருளின் மீது 10 N கிடை விசை 10 ms நேரத்துக்குப் பிரயோகிக்கப்படுகின்றது. SI அலகுகளில் பொருளின் உந்த மாற்றம்

1. $10^{-3}$ 2. 0.1 3. 1.0
4. $10^2$ 5. $10^3$

Ap-04

66. நுனி ஒன்றில் விறைப்பாக நிலைப்படுத்தப்பட்ட நிலைக்குத்தான மீள்தன்மை இழை ஒன்றின் கீழ் நுனியிலே திணிவு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இப்போது ஒரு விசை $F$ ஐப் பிரயோகிப்பதன் மூலம் திணிவு ஒரு மாறா வேகத்துடன் கீழ்நோக்கி அசைக்கப்படுகின்றது. நேரம் $t$ உடன் $F$ இன் மாறலை மிகச் சிறந்த முறையில் வகைகுறிப்பது



Ap-01

67.



உராய்வற்ற கிடை மேற்பரப்பு ஒன்றின் மீது ஓய்வில் இருக்கும் A, B என்னும் இரு சர்வசமத் துரொல்லிகளில் சர்வசமத் திணிவுகளை உடைய இரு சிறுவர்கள் நிற்கின்றனர். துரொல்லி A யில் நிற்கும் சிறுவன் திணிவு $m$ ஐ உடைய ஒரு பந்தைப் புவி குறித்து வேகம் V உடன் கிடையாக எறியும் அதே வேளை துரொல்லி B யில் நிற்கும் சிறுவன் அதனைப் பிடித்துக் கொள்கின்றான். சிறுவன் ஒருவனுடன் ஒரு துரொல்லியின் திணிவு $M$ எனின், A, B ஆகிய துரொல்லிகளின் இறுதி வேகங்கள் முறையே

1. $\frac{-mV}{M}, \frac{-mV}{M+m}$
2. $\frac{-mV}{M+m}, \frac{mV}{M+m}$
3. $\frac{-mV}{M}, \frac{mV}{M+m}$
4. $\frac{-mV}{M-m}, \frac{mV}{M+m}$
5. -V, V

Ap-03

68. பொருள் ஒன்று ஒரு கிடை மேசை மீது உள்ளது. பூச்சியத்திலிருந்து சீராக அதிகரிக்கும் ஒரு கிடை விசை $F$ இனால் இப்பொருள் இழுக்கப்படும்போது பொருளின் மீது தாக்கும் உராய்வு விசை $f$ இன் மாறலை மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிக்கும் வரைபு




1. 2. 3. 4. 5.

Ap-04

69.




ஓர் ஒப்பமான கிடை மேற்பரப்பு மீது வேகம் u வுடன் நேர் $x$ திசை வழியே இயங்குகின்றதும் திணிவு m ஐ உடையதுமான பொருள் A ஆனது உருவில் காணப்படுகின்றவாறு ஓய்வில் இருக்கும் ஒரு சர்வசமப் பொருள் B உடன் பூரண மீள்தன்மை மோதுகையை ஆக்குகின்றது. மோதுகைக்குப் பின்னர் A, B ஆகியவற்றின் வேகங்கள் முறையே

1. $0$, நேர் $x$ திசை வழியே $u$ ஆகும்.
2. நேர் $x$ திசை வழியே $\frac{u}{2}$ , நேர் $x$ திசை வழியே $\frac{u}{2}$ ஆகும்.
3. மறை $x$ திசை வழியே $\frac{u}{2}$ , நேர் $x$ திசை வழியே $\frac{u}{2}$ ஆகும்.
4. மறை $x$ திசை வழியே $u$, $0$ ஆகும்.
5. $0$ நேர் $x$ திசை வழியே $\frac{u}{2}$ ஆகும்.

Ap-04

70. சைக்கிளோட்டி ஒருவர் உராய்வு உள்ள ஒரு மேற்பரப்பின் மீது சைக்கிளைச் செலுத்தும்போது சைக்கிளின் இரு தயர்களின் மீதும் தாக்கும் உராய்வு விசைகளின் திசைகளைப் பின்வரும் உருக்களில் எது காட்டுகின்றது?



1. 2. 3. 4. 5.

Ap-05

71. ஒரு கிடைப் பனிக்கட்டி மேற்பரப்பு மீது நிற்கின்ற A, B என்ற இரு சிறுவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளுவதன் மூலம் அப்பால் செல்கின்றனர். A யின் நிறை B யின் நிறையின் இருமடங்காகும். A ஆனவர் 4 m செல்லும்போது B செல்லும் தூரம்




1. 0
2. 2 m
3. 4 m
4. 8 m
5. 12 m

Ap-06

72. ஒரு பெரிய ஆகாயவிமானம் 500 km hr$^{-1}$ இலிருந்து 505 km hr$^{-1}$ இற்கும், ஒரு மோட்டர்க் கார் 50 km hr$^{-1}$ இலிருந்து 55 km hr$^{-1}$ இற்கும், ஒரு சைக்கிள் 5 km hr$^{-1}$ இலிருந்து 10 km hr$^{-1}$ இற்கு சீராக ஆர்முடுகுவதற்கு எடுக்கும் நேரங்கள் சமமெனக் கொள்க. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(A) எல்லாம் ஒரே ஆர்முடுகலை உடையன.
(B) எல்லாம் மேற்குறித்த காலத்தின்போது ஒரே தூரத்திற்குச் செல்கின்றன.
(C) ஒவ்வொன்றின் மீதும் உள்ள ஆர்முடுக்கும் விசை சமம்.

மேற்குறித்த கூற்றுகளிடையே,

1. (A) மாத்திரம் உண்மையானது.
2. (B) மாத்திரம் உண்மையானது.
3. (A), (B) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
4. (A), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
5. (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.

Ap-06

73. தாக்க விசையும் மறுதாக்க விசையும் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

(A) அவை பருமனில் சமம்.
(B) அவை ஒரே பொருளின் மீது தாக்குகின்றன.
(C) அவை திசையில் ஒன்றுக்கொன்று எதிரானவை.

மேற்குறித்த கூற்றுகளில்,

1. (A) மாத்திரம் உண்மையானது.
2. (A), (B) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
3. (A), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
4. (B), (C) ஆகியன மாத்திரம் உண்மையானவை.
5. (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.

Ap-08, 02

74. ஓர் ஏற்றியின் தளத்தின் மீது ஒரு பெட்டி தங்கியிருக்கின்றது. ஏற்றி நிலையாகவும் மேல்நோக்கி ஆர்முடுகும் போதும் கீழ்நோக்கி ஆர்முடுகும்போதும் தளத்தின் மீது பெட்டியை வழுக்கிக் கொண்டு செல்லத் தேவையான குறைந்தபட்ச விசையின் பருமன்கள் முறையே $F_1$, $F_2$, $F_3$ எனின்,

1. $F_2 > F_1 > F_3$
2. $F_1 > F_2 > F_3$
3. $F_3 > F_2 > F_1$
4. $F_1 > F_3 > F_2$
5. $F_1 = F_2 = F_3$

Ap-08, 20

75. ஓர் உராய்வின்றிய கப்பியின் மேலாகச் செல்லும் இலேசான இழை ஒன்றினால் தொடுக்கப்பட்ட 100 N, 400 N என்னும் நிறையுள்ள இரு குற்றிகள் உரு($A$) யில் காணப்படுகின்றன. தொகுதியில் உள்ள பாரமான குற்றி அகற்றப்பட்டு ஒரு கீழ் முக விசை 400 N இனால் இழை இழுக்கப்படும் நிலைமை உரு ($B$) யில் காணப்படுகின்றது. இரு நிலைமைகளிலும் 100 N குற்றியின் உரிய ஆர்முடுகல்கள்




1. $0.6\ m\ s^{-2}, 3\ m\ s^{-2}$ ஆகும்.
2. $6\ m\ s^{-2}, 6\ m\ s^{-2}$ ஆகும்.
3. $10\ m\ s^{-2}, 10\ m\ s^{-2}$ ஆகும்.
4. $6\ m\ s^{-2}, 40\ m\ s^{-2}$ ஆகும்.
5. $6\ m\ s^{-2}, 30\ m\ s^{-2}$ ஆகும்.

Ap-08, 32

76. ஒருவர் நிலைக்குத்தாக மேல்நோக்கிப் பாயும்போது பாதங்களின் மீது தளத்தினால் உஞற்றப்படும் விசை ($F$) ஆனது நேரம் ($t$) உடன் மாறும் விதம் உருவில் காணப்படுகின்றது. விசை ($F$) ஆனது 0.3 s இல் அவருடைய சாதாரண நிறையாகிய 650 N இற்குச் சமனான ஒரு பெறுமானத்திலிருந்து 1430 N இற்கு அதிகரித்து, 0.1 s இற்கு மாறாமல் இருந்து, பின்னர் பாதங்கள் தளத்துடனான தொடுகையையிழக்கும்போது பூச்சியத்திற்கு விழுகின்றது. அவர் எக்கதியில் தளத்திலிருந்து புறப்பட்டார்?




1. $1\ m\ s^{-1}$
2. $1.5\ m\ s^{-1}$
3. $2\ m\ s^{-1}$
4. $3\ m\ s^{-1}$
5. $10\ m\ s^{-1}$

Ap-08, 53

77. புறக்கணிக்கத்தக்க திணிவை உடைய ஒரு சுருளி வில்லைப் பயன்படுத்தி உராய்வற்ற கிடை மேற்பரப்பில் வைக்கப்பட்டுள்ள $M$, $m$ என்னும் இரு திணிவுகள் உருவில் காணப்படுகின்றவாறு ஒருமிக்கத் தொடுக்கப்பட்டுள்ளன. சுருளி வில் நெருக்கப்படுமாறு இரு திணிவுகளும் முதலில் ஒருமிக்க அழுத்தப்பட்டு, பின்னர் அது விடுக்கப்படுகின்றது. திணிவு $m$ இன் தொடக்க ஆர்முடுகல் $a$ எனின், அக்கணத்தில் திணிவு $M$ இன் ஆர்முடுகலின் பருமன் யாதாக இருக்கும்?




(1) $\frac{ma}{M+m}$ (2) $\frac{Ma}{M+m}$ (3) $\frac{Ma}{M}$ (4) $\frac{Ma}{m}$ (5) $\frac{(M+m)a}{m}$

Ap-09, 28

## 03. விசைத்திருப்பம்

01. AC = 2 m ஆயிருக்க 10 m நீளமும், 20 kg திணிவுமுடைய AB எனும் சீரான கோலொன்று B, C ஆகிய இரு தாங்கிகளில் கிடையாக வைக்கப்பட்டுள்ளது. கோலின் சமநிலையைக் குழப்பால் A யில் வைக்கக்கூடிய உச்ச திணிவு யாது?




(1) 7.5 kg (2) 10 kg (3) 20 kg
(4) 25 kg (5) 30 kg

Au -79

02. கிடைக்குச் சாய்வாகவுள்ள ஒரு கோலைப் படம் காட்டுகிறது. பின்வருவனவற்றுள் எதன் மூலம் அதனை மீண்டும் கிடையான ஒரு நிலைக்குக் கொண்டுவர இயலாது.



(1) சுமையை வலப்பக்கமாக அசைத்தல்
(2) தொங்கவிடப்பட்டிருக்கும் புள்ளியை இடப்பக்கமாக அசைத்தல்
(3) கோலின் வலப்பக்கப் புயத்தின் ஒரு புள்ளியில் சுமையொன்றைச் சேர்த்தல்.
(4) சுமையைக் குறைத்தல்.
(5) தொங்கவிடப்பட்டிருக்கும் புள்ளியை வலப்பக்கமாக அசைத்தல். Au -81

03.



(A)



(B)



(C)



(D)

A, B, C, D ஆகிய படங்களில் காட்டப்பட்டுள்ளவாறு P, Q, R, S ஆகிய பருமன்களையுடைய விசைகள் சதுர அடர் (தகடு) ஒன்றில் தாக்குகின்றன. P, Q, R, S ஆகியவற்றில் எதுவும் பூச்சியமில்லையாயின் மேலுள்ள எச்சந்தர்ப்பத்தில் சமநிலை சாத்தியமில்லை?

(1) A யும், B யும் மாத்திரம் . (2) A யும், D யும் மாத்திரம்.
(3) B யும், D யும் மாத்திரம். (4) B யும், C யும் மாத்திரம்.
(5) C மாத்திரம்.

Au -83

04. சமனிலாப் புயங்களுடைய தராசொன்று பொருளொன்றின் திணிவைத் துணியப் பாவிக்கப்பட்டது. ஒரு தட்டில் நிறுக்கப்பட்டபோது, அது $m_1$ தோற்றத் திணிவைக் கொடுத்தது. அடுத்த தட்டில் நிறுக்கப்பட்ட போது $m_2$ தோற்றத் திணிவு பெறப்பட்டது இப்பொருளின் உண்மையான திணிவு,

(1) $\sqrt{m_1.m_2}$ (2) $\frac{m_1.m_2}{2}$ (3) $\frac{m_1+m_2}{2}$

(4) $m_1 - m_2$ (5) $\frac{m_1^2+m_2^2}{m_1+m_2}$

Au -86

05. இரண்டு பாரமற்ற கோல்களுக்கு இழைகளினால் பொருத்தப்பட்ட A, B, C என்ற மூன்று பொருட்களின் ஒழுங் கொன்றைப் படம் காட்டுகிறது. இப் பொருட்களுக்கும் தாங்கும் இழைகளுக்கும் இடையிலுள்ள தூரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. A இனது திணிவு 10 g ஆயின், படத்தில் காட்டப்பட்டவாறு இவ்வொழுங்கு சமநிலையி லிருப்பதற்குரிய C யினது திணிவு,




(1) 5 g (2) 10 g (3) 15 g

(4) 20 g (5) 30 g

Au -87

06. $X, Y$ என்ற இரு தாங்கிகளின் மீது கிடையாக ஓய்விலிருக்கும் சீரான கோல் ஒன்றை வரிப்படம் காட்டுகிறது. நீளங்கள் $PQ, QR, RS, ST$ ஆகியன சமனாகும். $X$ ஐ நிலையாக வைத்து $Y$ ஆனது $S$ இலிருந்து $T$ இற்கு அசைக்கப்படும் போது, $X$ இனால் கோலின்மீது ஏற்படுத்தப்படும் மறுதாக்கமானது,




(1) குறைகையில், $Y$ இனாலான மறுதாக்கம் அதிகரிக்கும்.
(2) அதிகரிக்கையில், $Y$ இனாலான மறுதாக்கம் குறையும்.
(3) அதிகரிக்கையில், $Y$ இனாலான மறுதாக்கமும் அதிகரிக்கும்.
(4) குறைகையில், $Y$ இனாலான மறுதாக்கமும் குறையும்.
(5) $Y$ இனாலான மறுதாக்கத்திற்குச் சமமாயிருக்கும்.

Au -94

07. ஒரு பாரமற்ற கோல் $ABC$ ஆனது உருவிலே காட்டப்பட்டவாறு $S_1$, $S_2$ ஆகிய இரு விற் தராசுகளினால் கிடையாக வைக்கப்பட்டுள்ளது. $AB : BC = 1 : 2$ என்ற வகையிலமைந்துள்ள புள்ளி B யிலே 12 N சுமையொன்று பிரயோகிக்கப்படுமாயின், $S_1$, $S_2$ ஆகியவற்றிலுள்ள வாசிப்புக்கள் முறையே




1. 10 N உம் 2 N உமாகும்.
2. 6 N உம் 6 N உமாகும்.
3. 4 N உம் 8 N உமாகும்.
4. 8 N உம் 4 N உமாகும்.
5. 2 N உம் 10 N உமாகும்.

Au-98-O

08.




திணிவு $M$ ஐ உடைய சீர் வளை ஒன்று அதன் நடுப் புள்ளியிலிருந்து விற்றராசு ஒன்றினால் தொங்கவிடப்பட்டுள்ளது. வளையின் இரு முனைகளிலும் $m_1$, $m_2$ ($m_2 > m_1$) என்னும் இரு திணிவுகள் வைக்கப்பட்டுள்ளன. உருவில் காணப்படுகின்றவாறு முனை $B$ யில் வைக்கப்பட்டுள்ள ஆப்பு ஒன்றைக் கொண்டு வளை கிடையாகப் பேணப்படுகின்றது. விற்றராசின் வாசிப்பு

1. 0
2. $m_1g$
3. $(M + m_1)g$
4. $(M + 2m_1)g$
5. $(M + m_1 + m_2)g$

Au-01

09. $A$, $B$, $C$ என்னும் மூன்று திணிவுகள் உருவில் காணப்படுகின்றவாறு கிடைக் குறுக்குக் கோல்களிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறுக்குக் கோலினதும் திணிவு புறக்கணிக்கத்தக்கது. $A$ யின் திணிவு 6 kg எனின், $B$, $C$ ஆகியவற்றின் திணிவுகள் முறையே




1. 1.0 kg, 1.0 kg
2. 1.5 kg, 0.5 kg
3. 3.0 kg, 1.0 kg
4. 0.5 kg, 1.5 kg
5. 1.5 kg, 1.0 kg

Ap-03

10. ஆரை R ஐயும் திணிவு M ஐயும் உடைய வட்ட நாணயம் ஒன்று உருவில் காணப்படுகின்றவாறு உயரம் $R$ ஐ உடைய ஒரு படியைத் தொடுமாறு வைக்கப்பட்டுள்ளது. நாணயத்தைப் படிக்கு மேலாக இழுக்கத் தேவையான கிடை விசை $F$ இன் இழிவுப் பெறுமானம்




Ap-06

1. $\frac{Mg}{2}$ 2. $\frac{Mg}{\sqrt{2}}$ 3. $Mg$

4. $\sqrt{2}\,Mg$ 5. $2Mg$

11.







ஒரு பொருள் $X$ ஐயும் திணிவு $M$ ஐயும் காவும் இலேசான கோல் ஒன்றின் சமநிலைத் தானம் உரு $A$ யில் காணப்படுகின்றது. $X$ ஆனது நீரில் அமிழும்போது தொகுதியின் சமநிலைத் தானம் உரு $B$ யில் காணப்படுகின்றது. நீரின் அடர்த்தி $d$ எனின், $X$ ஆக்கப்பட்டுள்ள திரவியத்தின் அடர்த்தி

1. $\frac{L_1}{(L_1 - L_2)}d$ 2. $\frac{L_1}{L_2}d$ 3. $\frac{L_1}{(L_1 + L_2)}d$

4. $\frac{(L_1 - L_2)}{L_1}d$ 5. $\frac{L_2}{L_1}d$

Ap-03

மையம் $O$ ஆகவுள்ள ஒரு சில்லின் சுற்றளவில் உள்ள ஒரு புள்ளி $P$ யைக் கருதுக. உருவில் காணப்படுகின்றவாறு ஆரை $OP$ ஆனது $X$- அச்சுடன் கோணம் 45° ஐ ஆக்குகின்றது. நேரம் $t = 0$ இல் ஓய்வில் இருந்து தொடங்கி அதன் அச்சுபற்றி $4\ rad\ s^{-2}$ சீரான ஒரு கோண ஆர்முடுகலுடன் இச் சில்லு சுழலத் தொடங்குகின்றது. ஒரு நேரம் $t$ யில் புள்ளி $P$ யின் (பாகையிலான) கோண இடப்பெயர்ச்சியைத் தருவது




(1) $45° + \frac{720\,t^2}{\pi}$ (2) $45° + \frac{360\,t^2}{\pi}$

(3) $45° + \frac{180\,t^2}{\pi}$ (4) $\frac{360\,t^2}{\pi}$ (5) $\frac{180\,t^2}{\pi}$

12 ஒரு மேசையின் கரடான கிடைப் பரப்பு மீது வைக்கப்பட்டுள்ள ஒரு பெட்டி பருமன் $F$ ஐ உடைய ஒரு மாறும் கிடை விசையினால் இழுக்கப்படுகின்றது. $F$ இன் தரப்பட்டுள்ள ஒரு பெறுமானத்திற்குப் பரப்பினால் பெட்டி மீது உஞற்றப்படும் விளையுள் விசை $R$ ஆனது உருவில் காணப்படுகின்றவாறு கிடைத் திசையுடன் ஒரு கோணம் $\theta$ வை ஆக்குகின்றது. $F$ உடன் $\theta$ வின் மாறலை மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிப்பது







*2013*

13. ஒரு சமதள நிலத்தின் மீது ஒவ்வொன்றினதும் திணிவு $m$ ஆகவுள்ள இரு சர்வசம ஆப்புகள் அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளன. உருவில் காணப்படுகின்றவாறு திணிவு $M$ ஐ உடைய ஒரு சதுரமுகி அந்த ஆப்புகளின் மீது வைக்கப்பட்டுள்ளது. சதுரமுகிக்கும் ஆப்புகளுக்குமிடையே உராய்வு இல்லையெனக் கொள்க. ஆப்புகளுக்கும் நிலத்திற்குமிடையே உள்ள நிலையியல் உராய்வுக் குணகம் $\mu$ ஆகும். ஆப்புகளை அசைக்காமல் சமன்செய்யப்படத்தக்க $M$ இன் மிகப் பெரிய பெறுமானத்தைத் தருவது




(1) $\frac{\mu m}{\sqrt{2}}$ (2) $\frac{\mu m}{1-\mu}$ (3) $\frac{2\mu m}{1-\mu}$ (4) $(1-\mu)m$ (5) $\sqrt{2}(1-\mu)m$

*2011*

14 $A, B$ என்னும் இரு மோட்டர் வாகனங்களைக் கருதுக. மோட்டர் வாகனம் $A$ யில் முற்சில்லுகள் மாத்திரம் எஞ்சினுடன் இணைக்கப்பட்டுச் சுழற்றப்படும் அதே வேளை வாகனம் $B$ யில் பிற்சில்லுகள் மாத்திரம் எஞ்சினுடன் இணைக்கப்பட்டுச் சுழற்றப்படுகின்றன. $A, B$ ஆகிய மோட்டர் வாகனங்கள் முன்முகத் திசையில் செல்லும்போது தரையினால் அவ்வாகனங்களின் முற்சில்லுகளின் மீதும் பிற்சில்லுகளின் மீதும் தாக்கும் உராய்வு விசைகளின் **திசைகளைப்** பின்வரும் வரிப்படங்களில் எது சரியாகக் காட்டுகின்றது ?




*2014*

15 உருவில் ஒரு துணிக்கையின் இயக்கத்துக்கான வேக ($v$) – நேர ($t$) வளையி காணப்படுகின்றது. ஒத்த இடப்பெயர்ச்சி ($s$) – நேர ($t$) வளையி









*2011*

16. நேரம் $t$ உடன் ஒரு பொருளின் வேகம் $v$ யின் மாறல் உருவில் காணப்படுகின்றது.

நேரம் $t$ உடன் பொருளின் இடப்பெயர்ச்சி $s$ இன் ஒத்த மாறலை மிகச் சிறந்த விதத்தில் வகைகுறிப்பது






(1)



(2)



(3)



(4)



(5)

2011

17. அருகில் உள்ள ஒரு தென்னையை உண்ண முயலும், கயிற்றினால் ஒரு பலமான மரத்தில் கட்டப்பட்ட ஓர் எருது உரு (*a*) இல் காணப்படுகின்றது. எருதின் சுயாதீன உடல் வரிப்படத்தை (Free-body diagram) வகைகுறிப்பது



உரு (*a*)



(1)



(2)



(3)



(4)



(5)

2015

18. உருவில் காணப்படும் கப்பி ஒழுங்கமைப்பு ஓர் இழுப்பு உத்தி $D$ உடன் இணைக்கப்பட்ட ஒரு நோயாளியின் ஒரு காலின் மீது ஒரு விசையை உஞற்றுகின்றது. கப்பிகள் உராய்வின்றியும் தொகுதி நாப்பத்திலும் உள்ளன. $D$ யினால் காலின் மீது தாக்கும் கிடை விசை 80 N எனின், தொங்கும் திணிவு $m$ இன் பெறுமானம் $\left(\cos 30° = \frac{\sqrt{3}}{2}\right)$




(1) $\frac{4}{\sqrt{3}}$ kg

(2) 4 kg

(3) $\frac{8}{\sqrt{3}}$ kg

(4) 8 kg

(5) $8\sqrt{2}$ kg

2015 -







"உறக்கத்தில் வருவதல்ல கனவு
உறங்கவிடாமல் செய்வதே கனவு"